தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும்

# ஒன்றிய அரசைக் கண்டித்து சிவகங்கை மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் - கேஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சிவகங்கை, மார்ச். 28-

**திருப்புவனம்**

கிழக்கு மலவராயரேந்தல் - M.A.கடம்பசாமி அழகுபிள்ளை குணசேகரன் - திருப்புவனம் மேற்கு திருப்புவனம் -

மானாமதுரை பேருந்து நிறுத்தம் திருமதி.தமிழரசி ரவிக்குமார் தா.சேங்கைமாறன் - வசந்தி சேங்கைமாறன் - நாகூர்கனி - KM.பொற்கோ - தி. திருநாவுக்கரசு / TR.சேகர் S.மணிகண்டன் / PB.சங்கர் / அ.அண்ணாமலை / S.ராஜா / V.ரவிச்சந்திரன் / சித்ரா முருகன் / P.பன்னீர் செல்வம் / கு.முருகன் / V.விஜயகிருஷ்ணன்

**மானாமதுரை**

கிழக்கு முத்தனேந்தல் துரை.ராஜாமணி கு.ராஜாங்கம் / ஜெயமூர்த்தி / அ.மு.சண்முகநாதன்

மானாமதுரை - மேற்கு சின்னக்கண்ணனூர் ம.அண்ணாதுரை த.ராமையா / சே.நாகராஜன் / P.புவியரசு / அய்யங்காளை

**இளையான்குடி**

வடக்கு இளையான்குடி சுப.மதியரசன் அ.முகமது / T.உதயகுமார், நஜிமுதீன் ப.காளிமுத்து / மு.முருகானந்தம் / கு.சந்திரசேகர் / பா.சேகர் / MAC.நாசர் / ராஜகுரு

இளையான்குடி தெற்கு சாலைகிராமம் ஆறு. செல்வராஜ் வ.கணேசன் இளையான்குடி கிழக்கு சூரானம் வே. தமிழ்மாறன் புலிகுட்டி

இளையான்குடி மேற்கு திருவேங்கடம் K.வெங்கட்ராமன் சிவமுத்துவளவன்

**சிவகங்கை வடக்கு**

மதகுபட்டி ஆ.முத்துராமலிங்கம் பவானி கணேசன் / கிங்.கார்த்தி / மதிவாணன் / குமணன் / ரவி / முத்துவேல் செல்வம்

சிவகங்கை தெற்கு வாணியங்குடி M.ஜெயராமன் தமிழ்பிரியா / AER.சுரேஷ்குமார் / சித்தலூர் முருகன் / திலகவதி / மார்க்ரெட் கமலா / அர்ச்சுணன் / பிரவின்குமார் / சிங்கமுத்து / செல்வராணி

காளையார்கோவில் வடக்கு சொக்கநாதபுரம் RM.கென்னடி PTR. முத்து

காளையார்கோவில் தெற்கு மறவமங்களம் யோக.கிருஷ்ணகுமார் புகழேந்தி / சித்திரவேல்

காளையார்கோவில் கிழக்கு காளையார்கோவில் - பேருந்து நிலையம் அருகில் ஆரோக்கியசாமி M.அஜித்குமார் / காட்டுபுலி.சௌந்தர்ராஜன்

கல்லல் கிழக்கு கல்லல் பேருந்து நிலையம் அருகில் நா.நெடுஞ்செழியன் கரு.அசோகன் / தெய்வானை இளமாறன் / புலிகுத்தி சீனிவாசன் / நாகவயல் ராஜேந்திரன் / பரணி கிட்டு / நம.சௌந்தர்ராஜன் / கலா.காசிநாதன்

எஸ்.புதூர் புதூர் பி. செல்வராஜ் சிங்காரம் / துரைராஜ் / செல்வம் / ஜமால் முகமது / ஜெயகணேஷ் / மகாலிங்கம் / கௌரி சங்கர் / துரை / ஆரோக்கிய சாமி.

**சிங்கம்புணரி வடக்கு**

காளாப்பூர் எம். பூமிநாதன் அ. கணேசன் / பூரண சங்கீதா / அம்பலமுத்து / சோமசுந்தரம் / புகழேந்தி / ஆனந்த கிருஷ்ணன் / கருவேலன் / ஞானி செந்தில் / செல்வகுமார் / இராமநாதன் / நிர்மலா / கோபால கண்ணன்

சிங்கம்புணரி தெற்கு மு. சூரக்குடி கே. பாலசுப்பிரமணியன் பி.ஆர். பெருமாள் / க.தி. ராஜ்குமார் / சதிஷ் குமார் / நாகராஜன் / மகேந்திரன்.

**திருப்பத்தூர் வடக்கு**

வேலங்குடி எம். மாணிக்கம் ஜி. சாமிகண்ணு / கே.பி.எஸ். பழனியப்பன் / செழியன் / சரவணன் / பாஸ்கரன்.

திருப்பத்தூர் தெற்கு திருகோட்டியூர் எஸ். சண்முக வடிவேல் எஸ்.எஸ்.எ. அருணாச்சலம் / ஆர். கார்த்திகேயன் / கே.எஸ். நாராயணன் / சுலைமான் பாதுஷா / வல்லபாய் / உதயம் சண்முகம் / மே.ந. காளிமுத்து / மலை ராதாகிருஷ்ணன் / பாண்டியன் / சோமசுந்தரம் / சீமான் சுப்பு / தமிழ் நம்பி / முகமது கனி / ராஜேஸ்வரி / பாண்டியம்மாள்.

கல்லல் மேற்கு ஆலங்குடி ஆர்.ஜி. சுப்பிரமணியன் சில்வஸ்டர் / சேவியர் / சந்திரன் / மஞ்சரி.

சாக்கோட்டை மேற்கு வா. சூரக்குடி டாக்டர். கே.எஸ். ஆனந்தன் கே.எஸ். ரவி / தி.ஆர். முத்து சாமி / பி.சி.டி. ராசு / பி.ஆர். ஆனந்தன் / கார்த்திக் சோலை / ராதிகா / சாந்தி சங்கர் / மணிமகலை / வழக்கறிஞர்கள் பாலசுப்பிரமணியன் / பாலசுப்பிரமணியன் / எம். முருகப்பன் / காஞ்சனா / ஈஸ்வரன் / குமார் / செந்தில்.

சாக்கோட்டை கிழக்கு புதுவயல் சுப. சின்னத்துரை பக்குருதீன் அலி பாய் / ப்ரமயா / முகமது மீரா / சங்கீதா செல்லப்பன் / க. பழனி.

தேவகோட்டை வடக்கு பாவனக்கோட்டை வி. பூபாலசிங்கம் ஆதி கன்னாத்தாள் / கல்லங்குடி கருப்பையா / அன்பழகன் / அசோக் / பாண்டி.

தேவகோட்டை தெற்கு முப்பையூர் ஆர். ரவி பி. செந்தில் குமார் / இராமகிருஷ்ணன் / ராஜபாண்டி / பிரபு / சுரேஷ் / சசிகுமார்.

கன்னங்குடி அனுமந்தங்குடி லே.மு. ரவிச்சந்திரன் ஜோன்ஸ் ரூசோ / அழகேசன்

---

தர்மபுரி மேற்கு மாவட்ட மூத்த கழக முன்னோடி

# சி.தேசிங்குராஜன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 28-

தருமபுரி மேற்கு மாவட்ட மூத்த கழக முன்னோடி சி.தேசிங்கு ராஜன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தருமபுரி மேற்கு மாவட்ட மூத்த கழக முன்னோடிகளில் ஒருவரும் - அரூர் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளரும் - மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக பொறுப்பு வகித்து வரும் சி.தேசிங்குராஜன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் -தருமபுரிமேற்குமாவட்டகழகஉடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

**100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழுங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில்**

# மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் அறிக்கை வருமாறு:

100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் **29.3.2025 சனிக்கிழமை, காலை 9.00 மணி அளவில்** மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடத்தப்பட வேண்டும் என்று தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது அதன் தொடர்ச்சியாக புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றியங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.

| ஒன்றியம் | ஆர்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|
| குன்றாண்டர்கோவில் கிழக்கு, மத்தியம் | கிள்ளுக்கோட்டை |
| குன்றாண்டார்கோவில் மேற்கு | வைத்தூர் |
| புதுக்கோட்டை தெற்கு | இச்சடி |
| புதுக்கோட்டை வடக்கு | பெருங்களூர் |
| கறம்பகுடி தெற்கு | கருவட தெரு |
| கறம்பக்குடி வடக்கு | ரெருநாதபுரம் |
| கந்தர்வகோட்டை வடக்கு | தச்சங்குறிச்சி |
| கந்தர்வகோட்டை தெற்கு | கந்தர்வகோட்டை |
| அன்னவாசல் வடக்கு | விளத்துப்பட்டி அஞ்சல் அலுவலகம் |
| அன்னவாசல் தெற்கு | பரம்பூர் |
| விராலிமலை மேற்கு | கொடும்பாளூர் |
| விராலிமலை கிழக்கு, மத்திய ஒன்றியங்கள் | ஆவூர் நால்ரோடு |

கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், செயல்வீரர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளை அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**கே.கே. செல்லபாண்டியன்,** மாவட்ட கழக செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு

---

# நெல்லை மாநகராட்சி 2025-2026க்கான பட்ஜெட்!

## மாநகராட்சி மேயர் கோ.இராமகிருஷ்ணன் தாக்கல் செய்தார்!

நெல்லை.மார்ச்.28.

நெல்லை மாநகராட்சி 2025 -2026 க்கான பட்ஜெட்டை மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் நேற்று முன்தினம் (26 ஆம் தேதி)தாக்கல் செய்தார்.

இந்த பட்ஜெட் மாமன்ற உறுப்பினர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

நெல்லை மாநகராட்சி மைய அலுவலகம் ராஜாஜி மண்டபத்தில் 2025-2026 காண பட்ஜெட் கூட்டம் (26-03-25) அன்று மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர் என்.ஓ. சுகபுத்ரா,துணை மேயர் கே. ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் ரூபாய் 2.77 கோடிக்கு உபரி பட்ஜெட்டை மேயர் கோ.ராமகிருஷ்ணன் தாக்கல் செய்தார்.பட்ஜெட் நகலை மாநகராட்சி வரி விதிப்பு குழு தலைவர் சுதா மூர்த்தி,குழு உறுப்பினர்கள் சகாய ஜூலியட் மேரி, உலகநாதன்,பொன் மாணிக்கம்,ஜான் ரசூல் மைதீன், அல்லா பிச்சை ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் மேயர் கோ.ராமகிருஷ்ணன் பேசியதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் இந்த பட்ஜெட் தயார் செய்யப்பட்டுள்ளது.தாமிரபரணி உள்ளிட்ட நதிகளை மேம்படுத்த ரூபாய். 400 கோடி,நெல்லை அருகே நரசிங்கநல்லூரில் தொழிற்பேட்டை, பேட்டை கூட்டுறவு நூற்பாலை இயங்கிய இடத்தில் சிறு,குறு தொழில் வளர்ச்சி ஏற்படுத்தி அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் சட்டமன்றத்தில் அறிவிப்பு வழங்கிய திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கு இம் மாமன்றம் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நெல்லை, தென்காசி மாவட்டத்திற்கு ரூபாய் 896 கோடி செலவில் கூட்டு குடிநீர் திட்டத்தை அறிவித்த திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களுக்கும்,உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மேயர் கோ. ராமகிருஷ்ணன் பேசினார்.

பின்னர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

தொடர்ந்து ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் நகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதிக்காக நிதி ஒதுக்கீடு செய்யபட்டும்,1500.00 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வரும் மின் கட்டணத்தை சேமிக்கும் நோக்கில் சோலார் திட்டம் மேற்கொள்ளப்படும். ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் பொது மக்கள் தங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் மாநகராட்சி பூங்காக்களில் உடற்பயிற்சி கூடங்கள் உருவாக்கப்படும். ரூபாய் 20 லட்சம் செலவில் 40 இடங்களில் ரூபாய் 800.00 லட்சம் மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாநகரில் பிரதான சாலைகளின் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிறுத்தங்கள் கட்டித் தரப்படும்.

ரூபாய் 240.00லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பள்ளிகளில் மாணாக்கர்களின் கற்றல் திறனை பயிற்றுவிக்க ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைத்துக் கொடுக்கப்படும். ரூபாய் 200 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பூங்காக்கள் புனரமைக்கப்படும்,ரூபாய் 150 லட்சம் மதிப்பீட்டில் பிராணிகள் எரிவாயு தகன மேடை அமைக்கப்படும். ரூபாய் 150 லட்சம் மதிப்பீட்டில் கழிவறைகள் சுத்தம் செய்யும் 4 கம்பிரஸர் கள் மற்றும் 3 front loader வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும்.ரூபாய் 60 லட்சம் மதிப்பீட்டில் கால்நடைகளுக்கான வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும்.

ரூபாய் 3 லட்சம் மதிப்பீட்டில் 100 சதவீதம் தேர்ச்சி விகிதம் அடையும் பள்ளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்,ரூபாய் 400 லட்சம் மதிப்பீட்டில் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை மையம் அமைத்தல், ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட ஓ.எஸ்.ஆர்.இடங்களை பறக்கும் கண்காணிப்பு காமிரா மூலம் சர்வே செய்து கணினி மயமாக்குதல்,

ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பள்ளி மாணாக்கர்களுக்கு செஸ், பாட்மிட்டன் மற்றும் ஸ்கேட்டிங் விளையாட்டு ஆகியவற்றிற்கு சிறப்பு பயிற்சி வகுப்புகள், ரூபாய் 45 லட்சம் மதிப்பீட்டில் கம்பி இல்லா தகவல் பரிமாற்றம் கருவி கொள்முதல்,ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் நெல்லை வரலாற்று சின்னங்கள் அடையாளப்படுத்துதல்,ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் நடமாடும் வரிவசூல் வாகனம் கொள்முதல்,ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் தடுப்பு வேலி அமைத்தல், ரூபாய் 90 லட்சம் மதிப்பீட்டில் ஆக்கிரமிப்பு அகற்றும் 4 வாகனங்கள் கொள்முதல்,10 லட்சம் மதிப்பீட்டில் மண்டல அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான உடற்பயிற்சி கூடம்,ரூபாய் 9,344-00 லட்சம் மதிப்பீட்டில் ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டப் பணிக்கு 21-01-25 அன்று ஒப்பந்த புள்ளி பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளி கூர்ந்தாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றது.

ரூபாய் 591.90 லட்சம் மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ராமையன்பட்டி குப்பை கிடங்கில் windrow composting அமைப்பதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு,விதிமுறைகள் பின்பற்றப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு ள்ளது. அரசு மானியமாக வழங்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 5572-00 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி பகுதிகளில் தாமிரபரணி ஆறு மாசுபடுவதை கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்யப்பட்டு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ரூபாய் 13,000-00லட்சம் மதிப்பீட்டில் 237 கிலோ மீட்டர் நீளத்தில் சாலைகள் சீரமைப்பு பணிகள்,ரூபாய் 160 லட்சம் மதிப்பீட்டில் 4 மண்டலத்திற்கும் 4 எண்ணம் கால் நடை கொட்டகை அமைத்தல்,ரூபாய் 1500-00 லட்சம் மதிப்பீட்டில் நெல்லை மண்டல அலுவலக கட்டிடம் மற்றும் மாமன்ற கூட்டஅரங்கம் அமைத்தல்,ரூபாய் 3300-00 லட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி தலைமை நீரேற்று நிலையங்களில் இருந்து வரும் பிரதான குழாய் மாற்றி அமைத்தல்,வர்த்த மையம் பின்புறம் உள்ள நிலத்தை கையகப்படுத்தி மாநகராட்சி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

நெல்லை மாநகராட்சிக்கு சொந்தமான இராமையன்பட்டி உரக்கடங்கு பகுதியில் பூங்கா ரூபாய் 300-00லட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு அரசு மானியமாக வழங்கும் திட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.ரூபாய் 450-00 லட்சம் மதிப்பீட்டில் சந்திப்பு பகுதிகளில் மழை நீர் வடிகால் அமைத்தல்,அரசு மானியமாக வழங்கும் திட்டத்தின் கீழ் பழைய பேட்டை பகுதிகளில் புதிதாக பேருந்து நிலையம் அமைத்தல்,நெல்லை மாநகராட்சி விரிவாக்கப் பகுதிகளில் புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் ரூபாய் 500-00 லட்சங்கள் மதிப்பீட்டில் அமைப்பதற்கு அரசு மானியமாக வழங்கும் திட்டத்தின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. போன்ற சிறப்பு மற்றும் புதிய திட்டப் பணிகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சியின் சிறப்பான பட்ஜெட்டை வரவேற்று பேசினர்.

நிகழ்வில் மண்டல தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) ரேவதி (தச்சை)

கதிஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்) மகேஸ்வரி (நெல்லை) நிலை குழு தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகர செயற்பொறி யாளர் கண்ணன்,உதவி ஆணையாளர் கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் வரி விதிப்பு குழு தலைவர் சுதா மூர்த்தி நன்றியுரை யாற்றினார்.



நெல்லை மாநகராட்சி மைய அலுவலக ராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டரங்கில் மாநகர பட்ஜெட் கூட்டம் மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா துணை மேயர் ராஜ்,வரி விதிப்பு குழு தலைவர் சுதா மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் 2025–2026 விளை பயன் வரவு செலவு திட்டத்தினை தாக்கல் செய்தார். உடன் வரி விதிப்பு குழு உறுப்பினர்கள் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி

### மார்ச் 28 (1949)



"சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பு இயக்கத்தின் தனிப்பெரும் தளபதி! மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கும் தலைவன்! வைதீகத்தின் வைரி! வருணாசிரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற்செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! அஞ்சா நெஞ்சுடன் அறிவுப்பணி புரிந்து வந்தவர்! " என அறிஞர் அண்ணாவின் பாராட்டைப் பெற்றவர்.

முதல்முதலாக காஞ்சிபுரத்தில் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்திய பெருமைக்குரியவர்.

'தூக்குமேடை' நாடகத்தை கலைஞர் எழுதி நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களுடன் முக்கியப் பாத்திரத்தில் நடித்து தஞ்சையில் அரங்கேற்றப்பட்ட போது நாடகத்திற்கு தலைமையேற்ற அழகிரி அவர்கள் கலைஞரின் எழுத்தாற்றலையும், நடிப்பையும் பார்த்துவிட்டு, 'கலைஞர்' என்ற பட்டத்தை தன் வாயால் உச்சரித்து வழங்கினார்.

சிம்மம் கர்ச்சித்தது, புலி உறுமியது, கோடையிடி குமுறியது, பெரியார் பேச்சில் காணப்பட்ட அழுத்தம் திருத்தமான வாதமும், அழகிரி பேச்சில் காணப்பட்ட வீரங் கொப்பளிக்கும் வரிகளும், அண்ணா பேச்சின் அழகு தமிழும் என்னை வெகுவாக கவர்ந்தன" என்று தலைவர் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**